**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.64/2024 - PW- 8**

| | |
|---|---|
| Name | திரு. ஆறுமுகம் |
| Husband/Father Name | சுப்பிரமணி |
| Village /Area | சுந்தர்ராஜ் புரம் |
| Taluk | திருவள்ளுர் |
| Occupation | விவசாய கூலி |
| Age | 55 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 05.11.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த ரங்கநாதன் என் தங்கையின் கணவர். அசா.1 என்னுடைய தங்கை ஆவார். கடந்த 14.09.2021 அன்று காலை 08.00 மணியளவில் கோவிந்தாங்கல் பேருந்து நிறுத்தத்தில் என் மைத்துனர் ரங்கநாதன் வந்து கொண்டிருந்த போது உமேஷ், அன்பு, கிருஷ்ணன், கிருஷ்ணவேணி ஆகிய 4 நபர்கள் என் மைத்தரை மடக்கி இரும்பு பைப்பால் உமேஷ் என்பவர் ரங்கநாதன் தலையில் அடித்தார்.

பிறகு அன்பு என்பவர் கொம்பால் என் மைத்துனர் ரங்கநாதன் தலை மற்றும் உடலின் மீது அடித்தார். கிருஷ்ணன் மற்றும் கிருஷ்ணவேணி ஆகியோர் என் மைத்துனர் ரங்கநாதன் காலால் எட்டி எட்டி உதைத்தார்கள். அப்போது அவர் மயங்கி விழுந்து விட்டார் பிறகு அவரை சோளிங்கர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக வாலாஜா அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர் அவர் இறந்து விட்டதாக கூறினார்கள். இது சம்பந்தமாக பானாவரம் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம்

பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் எதிரிகள் அடித்ததை நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் சம்பவம் முன் தினம் சென்று தங்கிவிட்டேன். அன்று மொத்தம் இரண்டு சம்பவங்கள் நடந்தது. ரங்கநாதனின் தம்பியை எங்கு அடித்தார்கள் என்றால் பேருந்து நிறுத்தத்தில் தான் அடித்தார்கள். அதே இடத்தில் தான் ரங்கநாதனையும் அடித்தார்கள்.

முதலில் ரங்கநாதனை அடித்து விட்டு 5 நிமிடம் கழித்து அவரது தம்பியை அடித்தார்கள். என் ஊருக்கும் சம்பவ இடத்திற்கும் இடைப்பட்ட தொலைவு 20 கி.மீ இருக்கும். நான் சம்பவம் முன் தினமே சென்று தங்கியிருந்தேன் என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

ரங்கநாதனின் தம்பியை அடித்த விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் கூற வில்லை என்று சொன்னால் சரிதான். சோளிங்கர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதால் தகவல் கிடைத்து வாலாஜா மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் என்று போலீஸ் விசாரணையில் கூறியிருந்தேனா என்றால் இல்லை.

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் நேரில் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் யாரும் ரங்கநாதன் மற்றும் அவரது தம்பியை அடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் வழக்கிற்காக நான் தயார் செய்யப்பட்ட சாட்சி என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.05 18:13:49 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.